குமரிமுனையில் இருந்து அய்யன் திருவள்ளுவர் சிலையை பார்ப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் எளிதாக சென்றடையும் வகையில், படகு சவாரி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் மூன்று புதிய பயணிகள் படகுகள் வாங்கப்படும் என்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுப்புக்கிணங்க கோவா கப்பல் கட்டும் தளத்தில் (Synergy Shipyard, Goa) நடைபெற்று வரும் படகு கட்டுமானப் பணிகள் தொடர்பாக நேற்று (17.02.2026) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தமிழ்நாடு கடல்சார் வாரிய அலுவலர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல்அலுவலர் தி.ந.வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் எ.வ.வேலு தலைமையில்

தமிழ்நாடு கடல்சார் வாரியக் கூட்டம்!

சென்னை, பிப்.18-

தமிழ்நாடு கடல்சாரி வாரியத்தின் 98ஆவது வாரியக் கூட்டம் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 98ஆவது வாரியக் கூட்டம் நேற்று (17.2.2026) தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை, 5ஆவது தளத்தில் உள்ள கூட்டரங்கில், பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

வாரியக் கூட்டத்தினை தொடங்கி வைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்.

அமைச்சர் அவர்களின் தொடக்கவுரையில்;

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 98வது வாரியக் கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் அரசுத்துறைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர் / துணைத்தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மற்றும் அனைத்து உறுப்பினர்களையும் உளமார வரவேற்கிறேன்.

1069 கிலோ மீட்டர் நீளம் கொண்ட தமிழ்நாட்டின் கடற்கரையில் 3 பெருந்துறைமுகங்களும், *17* சிறுதுறைமுகங்களும் உள்ளன. தமிழ்நாடு கடற்கரை நெடுக உள்ள 14 கடலோர மாவட்டங்களில் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு சிறுதுறை முக மேம்பாட்டுத் திட்டங்கள் கடந்த 5 ஆண்டுகளில் முன்னெடுக்கப் பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை குறிப்பிட்டார்கள்.

கடந்த 40 ஆண்டுகளாக செயல்பாட்டில் இல்லாத கடலூர் துறைமுகம், தனியார் துறைமுக இயக்கு நிறுவனம் மூலம், இயக்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டு, சரக்கு கையாள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொன்றுதொட்டு வந்த தமிழ் உறவுகளை இணைக்கும் வண்ணம், துரித முயற்சி மேற்கொண்டு நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கையில் உள்ள காங்கேசன்துறைக்கு (யாழ்ப்பாணம்) பன்னாட்டு பயணிகள் படகுப் போக்குவரத்து அக்டோபர் 2023இல் துவக்கப்பட்டு, தற்போதுவரை வெற்றிகரமாக இயக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில், பெரிய முதலீட்டுடன் துறைமுகங்களை அமைக்கும் நோக்கில், நீண்டகால ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் வண்ணம் தமிழ்நாடு சிறுதுறைமுக மேம்பாட்டுக் கொள்கை 2023இல் புத்தாக்கம் செய்யப்பட்டு 15.11.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

வெள்ளி விழா கண்ட அய்யன் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலையினை இணைக்கும் நோக்கில், புதிய கண்ணாடிப் பாலம் அமைக்கப்பட்டு, *31.12.2024* அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் இருந்தும் மற்றும் வெளி நாடுகளிலில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் திரளாக வந்து கண்டுகளித்து செல்கின்றனர்.

தென் தமிழ்நாட்டின் கடலோர பகுதிகளில் அமையவுள்ள சிறுதுறைமுகங்களை நிர்வகிக்கும் நோக்கில், இராமேஸ்வரம் துறைமுகத்தில், ஒரு புதிய நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, *30.7.2025* அன்று திறப்பு விழா நடைபெற்றது.

இராமேஸ்வரத்தில் சுற்றுலாப் படகுப் போக்குவரத்தை துவக்கி சுற்றுலாப் பயணிகளுக்கு குறைந்ததூர கடல்பயணம் மேற்கொள்ள வசதியாக இரண்டு இடங்களில் (அக்னி தீர்த்தம் மற்றும் பாம்பன் அணுகு பகுதி) மிதக்கும் தோணித்துறைகள் கட்டப்பட்டு வருகிறது.

மேலும், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கன்னியாகுமரிக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் வசதிகளை மேம்படுத்துவதற்காக, புதிதாக 3 படகுகள் (1. பெருந்தலைவர் காமராசர் 2. மார்ஷல் நேசமணி 3. ஜி.யு.போப்) வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதில், "பெருந்தலைவர் காமராசர்" என்று பெயரிடப்பட்ட படகு கட்டுமானப் பணிகள் விரைவில் நிறைவடையவுள்ளன. *3.2.2026* அன்று கட்டுமான பணிகள் நடைபெறும் கோவா விற்குச் (*Synergy Shipyard, Goa*) சென்று, இப்பணிகளை களஆய்வு செய்து, படகின் கட்டுமான பணிகளை விரைவாக நிறைவு செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

2018-19 ஆம் நிதியாண்டின் இறுதியில், *12* இலட்சம் மெட்ரிக் டன்கள் கையாண்ட தமிழ்நாட்டின் சிறுதுறைமுகங்களில் திறன்மேம்பாடு செய்யப்பட்டு, சரக்கு கையாளுதல் படிப்படியாக உயர்ந்து, தற்போது கடந்த நிதியாண்டின் (2024-25) இறுதியில் சுமார் *118* இலட்சம் மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

மேலும் சில முன்னெடுப்புகளைப் பற்றி அமைச்சர் விளக்கிக் கூறினார்;

கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள், மத்திய மற்றும் மேற்கு மாவட்டங்களிலுள்ள சரக்குகளை கையாள்வதற்காக ஒரு புதிய பசுமை வளத்துறைமுகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அதற்கான பூர்வாங்கப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

இராமேஸ்வரத்தில் இருந்து சுமார் *1* மணிநேர பயணதூரத்தில் சென்றடையக்கூடிய இலங்கையில் உள்ள தலைமன்னாருக்குப் பயணிகள் சேவையினை துவக்குவதற்கான இராமேஸ்வரத்தில் பன்னாட்டு வசதியுடைய பயணிகள் முனையம் மற்றும் தோணித் துறை அமைப்பதற்கு, ஒன்றிய அரசிடம் நிதியுதவி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில், தேவனாம்பட்டினம் அருகே அமைந்துள்ள நூற்றாண்டு பழமையான துறைமுக அலுவலர் குடியிருப்பு வளாகத்தை, கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியக வளாகமாக மாற்றுவதற்கான பூர்வாங்கப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் அனைத்து கடலோர மாவட்டங்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசால் *1.4.2026* அன்று முதல் துவக்கப்படவுள்ள சாகர்மாலா *2.0* திட்டத்தின்கீழ், நிதியுதவி கோரி, சுமார் *18,000* கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

நிலையான வளர்ச்சி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றை கருத்திற்கொண்டு, கடல்சார் கட்டமைப்புகளை உருவாக்கி, சிறு துறைமுகங்களை மேம்படுத்தி, தமிழ்நாட்டை முன்னணி கடல்சார் மாநிலமாக உருவாக்கும் நோக்கில், "தமிழ்நாட்டின் வளர்ச்சியில் யாரையும் பின் தங்க விடமாட்டோம். வெல்வோம் ஒன்றாக" என்ற முதலமைச்சரின் சூளுரையை தொடர்ந்து பணியாற்றவும், இதுவரை இந்த வாரியத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து உறுதுணையாக இருந்த அனைத்து வாரிய உறுப்பினர்களுக்கும், கடல்சார் வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றி தெரிவித்து உரையை நிறைவு செய்தார்.

அமைச்சர் அவர்களின் உரையை தொடர்ந்து, வாரியக் கூட்டத்தின் நிகழ்ச்சிநிரல்படி விவாதங்களுக்குப் பிறகு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகரத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, ஒன்றியக்குழு தலைவர்கள் எல்.இதயவர்மன், உதயாகருணாகரன், நகர மன்றத் தலைவர்கள் ஜெ.சண்முகம், எம்.கே.டி.கார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் உள்ளனர்.

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை! தாம்பரம் தொகுதியில்

ரூ 37.55 கோடி மதிப்பில் - அரசு புற்றுநோய் நல்வாழ்வு மையம் திறப்பு!

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

தாம்பரம், பிப்.18-

தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில், இன்று (*18.2.2026 - புதன்கிழமை*) காலை *7:30* மணி அளவில், தாம்பரம் ஆடிட்டோரியம் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களால், வழங்கப்பட்ட, சென்னை மருத்துவ கல்லூரி தாம்பரம் வளாகம் கீழ் செயல்பட, அரசு புற்றுநோய் நல ஆதரவு மையம் மற்றும் உபகரணங்கள் ரூ.*37.55* கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

இதனை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்திட, கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு குறு - சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் - காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர்கள் வருகை தர உள்ளார்கள்.

மேலும் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர், மண்டல குழு தலைவர்கள், பகுதி, வட்ட, கழக செயலாளர், நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட, இளைஞர் அணி, உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொள்ளுமாறு, மாநகரக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதிய இணையதளம் 'தமிழ் மணம்' திட்டத்தில் 10 கலை பயிற்றுநர்களுக்கு பணி ஆணைகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர் பிப்18;

தமிழர் தடம் என்ற தமிழர்களின் புலம் பெயர்வு தொடர்பான தரவுகளை ஆவணப்படுத்தும் புதிய இணையதளத்தை தொடங்கி வைத்தல் மற்றும் தமிழ் மணம் திட்டத்தின் கீழ் *10* கலை பயிற்றுநர்களுக்கு பணி ஆணைகளை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்.

தமிழர் தடம் என்பது உலகெங்கும் பரந்து வாழும் புலம் பெயர்ந்த தமிழர்களின் இடம் பெயர்வு வரலாறு, தரவுகள் மற்றும் அனுபவங்களை ஆவணப்படுத்த உருவாக்கப்பட்ட, திறந்த உள்ளடக்க இணையவழிக் களஞ்சியமாகும். தமிழ் நாட்டிலிருந்து பல் வேறு காலகட்டங்களில் அயல்நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்கள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு தரவுகள் முழுமையாக ஆவணப்படுத்தப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பின் படி இத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. காலனித்துவக் காலம் முதல் தமிழர்களின் இடம் பெயர்வு தொடர்பான

வரலாற்றுச் செய்திகள், ஆய்வுக்கட்டுரைகள், குடிபெயர்வு குறிப்புகள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களின் அனைத்து வரலாற்று நிகழ்வுகளையும் பதிவு செய்யவும், பகிரவும் தமிழர் தடம் வலைதளம் பயன்படும். இந்த வசதிகளுடன் கூடிய தமிழர் தடம் வலைதளத்தினை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் நாசர் நேற்று, சென்னை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

மு.க.ஸ்டாலின் "நூறு ஆசிரியர்கள் மற்றும் மேலும், முதல்வர் தமிழ்க் கலைஞர்களுக்கு பயிற்சி கொடுத்து இவர்களை அயலக தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு தேவைக் கேற்ப அனுப்பி, நேரடிப் பயிற்சி வகுப்புகள் மூலமாக தமிழ் மொழி மற்றும் கலைகளை அயலகத் தமிழர்களுக்கு கற்பிக்கப்படும் என்ற அறிவிப்பினை. தமிழ் மணம் என்ற திட்டம் மூலம், அயலகத் தமிழர் நலத்துறை தமிழ் இணையக் கல்விக் கழகம் மற்றும் கலை பண்பாட்டுத்துறை ஆகிய மூன்று துறைகளும்

இணைந்து செயல்படுத்தி வரும் நிலையில் முதற்கட்டமாக, அயலகத் தமிழர் தின விழா 2026ல் முதல்வரால் 10 தமிழாசிரியர்களுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக தற்போது ரியூனியன். மாலத்தீவு, மொரீசியஸ், இந்தோனேசியா, மலாவி, சீசெல்ஸ், மியான்மர். கம்போடியா ஆகிய 8 நாடுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 10 கலை பயிற்றுநர்களுக்கு நேற்று சென்னை தலைமைச் செயலகத்தில் பணி ஆணையை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்.

நிகழ்ச்சிகளில், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையத் துறை செயலாளர் மணிவாசன், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் ரீட்டா ஹரிஷ் தக்கர். அயல பலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் வள்ளலார். கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் (பொ) வளர்மதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மொழியியல் முதல் ஆய்வரங்கம்!

சமற்கிருதத்துக்குத் தமிழின் கொடை!

செந்தலை ந.கவுதமன் – பேராசிரியர் அருளியார் – பொழிலன் உரை!

சென்னை, பிப்.18-

பாவலரேறு தமிழ்க் களம், தமிழக மக்கள் முன்னணி, அருளியார் மொழிப்புலம் அமைப்புகளின் சார்பில் சென்னை, கவிக்கோ அரங்கில் *21.2.2026* சனிக்கிழமை மாலை *5* மணிக்கு 'சமற்கிருதத்துக்குத் தமிழின் கொடை' முதல் ஆய்வரங்கம் நடைபெறுகிறது.

மொழியியல் அறிவியல் வழி மெய்ப்பிக்கும் மாதம் ஒரு தொடர் கருத்தரங்கத்தின் முதல் அரங்கமான இந்நிகழ்வில் அறிஞர் கோ.தாமரைக்கோ நிகழ்வு நிரலில், தோழர் பொழிலன் நோக்கமும் ஒருங்கிணைப்பில், சூலூர் பாவேந்தர் பேரவை - புலவர் செந்தலை ந.கவுதமன் வாழ்த்தும் தொடக்கவுரையும் நிகழ்த்துகிறார்.

பேராசிரியர் அருளியார் ஆய்வுப் பொழிவு நிகழ்த்துகிறார்.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து

தலைமைக் கழக அறிவிப்பு

கோவை தெற்கு மாவட்டம், வெள்ளலூர் பேரூரைச் சேர்ந்த வி.ஜெயக்குமார் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 17.02.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

விருதுநகர் தெற்கு மாவட்டம்
ராஜபாளையம் மேற்கு ஒன்றியம்

சேத்தூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

விருதுநகர் தெற்கு மாவட்டம், ராஜபாளையம் மேற்கு ஒன்றியம், சேத்தூர் பேரூர்ச் செயலாளர் பி.ஏ.சிங்கம்புலி அண்ணாவி அவர்கள், வயது மூப்பின் காரணமாக தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **போ.சுந்தர்** (15-பி, ஆராய்ச்சியாளர் தெரு, சேத்தூர் - 626 121. விருதுநகர் மாவட்டம்) அவர்கள் சேத்தூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 17.02.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தஞ்சை மத்திய மாவட்டம் – தஞ்சை மாநகரம்,

மருத்துவக் கல்லூரி பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

தஞ்சை மத்திய மாவட்டம், மருத்துவக் கல்லூரி பகுதிக் கழகச் செயலாளர் சா.சதாசிவம் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **அ.அசார் (எ) வாசிம் ராஜா** (21, ரமணி நகர் 1வது தெரு, மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர்) அவர்கள் மருத்துவக் கல்லூரி பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 17.02.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (17.02.2026) சென்னை, IITM Research Parkஇல் நடைபெற்ற நிகழ்ச்சியில் MKS AI Academy இணையதளத்தினை துவக்கி வைத்து, முதற்கட்ட செயற்கை நுண்ணறிவு (AI) பயிற்சியினை முடித்த 3460 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை வழங்கி சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாதிரிப்பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன் (வி. ஓய்வு), பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர். ச.கண்ணப்பன், MKS AI Academy நிறுவனர் ஆர்.வெங்கடேசன், இணை ஒருங்கிணைப்பாளர் ஜி.அருணாச்சலம், நிர்வாகிகள், அலுவலர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பொன்னேரி சட்ட மன்ற தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் பொன்னேரியில் நடைபெற்றது. இதில் கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஜெ.மூர்த்தி, மு.பகலவன், சுரேஷ் செல்வராஜ், வெ.அண்புவணன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், ஜி.ரவிக்குமார், பரிமளம் விஸ்வநாதன், பா.செ.குணாசேகரன், நா.செல்வசேகரன், ஆ.ராஜா, மு.முரளிதரன், ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்த்குமார், ஜெகதீசன், க.சு.தமிழ் உதயன், பி.முத்து, ருக்மணி மோகன்ராஜ், கி.வேணுஆனந்த டி.கே.சந்திரசேகர், ஆ.சக்தியவேலு, ஜான்பொன்னுசாமி, பரிமளம், அபிராமி குமரவேல், மற்றும் பா.து.தமிழரசன், மா.தீபன், உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.